23 NOV 1971
UNIVERSITY LIBRARY

# மகாவலிசுரங்கத்தின் எதிர்ப்புறமாக தண்ணீர்ப் பெருக்கு

## திட்டம் ஸ்தம்பித்ததற்கு இதுவே காரணம்

கொழும்பு, திங்கள்

மகாவலி கங்கையை வடக்கு நோக்கித் திசைதிருப்பும் வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்ததன் அதற்கான காரணம் இப்பொழுது வெளியாகியுள்ளது.

பொல்கொல்லையிலிருந்து உக்குவலை வரைக்கும் தோண்டப்பட்டுவரும் சுரங்கத்தின் ஓர் இடத்தில் ஜலதாரை யொன்று எதிர் புறமாக பீறிட்டுப் பாயத் தொடங்கி விருக்கின்றது. இதனால் மகாவலி படுக்கை அபிவிருத்தித் திட்ட சபை நிர்வாகிகள் எதிர்பாராத பிரச்னை யொன்றுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது.

உக்குவலைப் பக்கமாக சுரங்கம் சுமார் முக்கால் மைல் தூரம் குடைந்து முடிக்கப்பட்டுள்ளது. இப் பகுதியில் கடந்தவாரம் திடீரெனத் தண்ணீர் எதிர்புறத்திலிருந்து பாயத் தொடங்கியது.

(6-ம் பக்கம் பார்க்க)

Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 13
இதழ் 283

சாதாரண வருடம் கார்த்திகை 7 ஷவ்வால் 4 செவ்வாய்க்கிழமை (23-11-71)

★ அந்நிய ஏஜண்ட், வங்கிகள்
★ பி. சி. சி., லிப்டன், புறூக்பொண்ட்
★ ஏற்றுமதி இறக்குமதி
★ ஏரிக்கரை பத்திரிகை நிறுவனம்
★ பிஸ்கட் கம்பனிகள்

# தேசீயமயமாக்க வேண்டும்

## வரவுசெலவுத்திட்ட விவாதத்தில் தேசப்பிரிய சேனநாயக்கா

கொழும்பு, திங்கள்

இந்நாட்டிலுள்ள அந்நிய ஏஜண்டுகள், வங்கிகள், ஏற்றுமதி இறக்குமதி, பி.சி.சி. பியர்தயாரிப்பு, பிஸ்கட், புறூக்பொண்ட், லிப்டன் தேயிலை, ஏரிக்கரைப் பத்திரிகைநிறுவனம் ஆகியவை தேசிய மயமாக்கப்பட வேண்டும் என்று, திட்டமிடல் வேலைவாய்ப்பு உதவி அமைச்சர் திரு ரத்ன தேசப்பிரிய சேன்நாயக்கா இன்று ஆட்சிமன்றத்தில் தெரிவித்தார்.

ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் 2-வது வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

திரு தேசப்பிரியசேனநாயக்கா தொடர்ந்து பேசுகையில், ஏரிக்கரை பத்திரிகை நிறுவனத்தை இந்த வரவு செலவுத்திட்ட விவாதம் முடிவதற்கு முன் பாகவோ அல்லது இந்த வாரத்துக்குள்ளோ தேசிய மயமாக்கப்பட வேண்டும். இது பொருளாதார கோரிக்கையல்ல ஒரு அரசியல் திட்டம் என்றார்.

மேலும் அவர் பேசும்பொழுது நில உச்சவரம்பு பற்றிக்குறிப்பிட்டு ஒருவருக்கு 25 ஏக்கர் காணிக்கு மேல் இருக்கக்கூடாது இந்தக்கோரிக்கையை நிறைவேற்ற நாம் தொடர்ந்து போராடுவோம் விளை நிலங்களுக்கு உச்சவரம்பு விதிக்கப்பட்டு, மிகுதியாக இருக்கும் காணிகளில் கூட்டுப் பண்ணைகள் அமைக்கப்பட வேண்டும். என்று கூறிய தேசப்பிரிய சேனநாயக்கா தீவேத நிலச்சீர்திருத்தம் என்ற நூலிலிருந்துசிலபகுதிகளை வாசித்துக் காட்டினார் இந்நூலை திரு. சேனநாயக்காதான் எழுதினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பொழுது சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வரவுசெலவுத்திட்டத்தில் தனிநபர் வருமான உச்சவரம்பு 2000 ரூபாய் எனவுள்ளது. ஒருவருடைய வருமான உச்சவரம்பு 1000 ரூபாவாக இருக்கவேண்டும் ஆனால் இப்போதைக்கு வருமான உச்சவரம்பு 2000 ரூபாவாக இருப்பதில் தவறில்லை. காலப்போக்கில் எமது கொள்கையை படிப்படியாகநடைமுறைப்படுத்தலாம் என்று தேசப்பிரிய சேனநாயக்காகுறிப்பிட்டார்.

## அரசாங்கத்தை வீழ்த்த சதித் திட்டம்

—ஹேரத்

அரசாங்கத்தை விழுத்துவதற்கு நாட்டில் சதித்திட்டம் ஒன்று உருவாகிவருகிறது இவ்விதமான சதித் திட்டங்களுக்கு இனிமேல் இடம் இல்லை என்று பொல்காவலை ஆட்சிமன்ற உறுப்பினர் மைத்திரிபாலஹேரத் வரவு செலவுத்திட்ட விவாதத்தில் கூறினார்.

அவர் மேலும்பேசுகையில் இந்த அரசாங்கத்தை வீழ்த்த 60 லட்சம் ரூபா நிதி சேகரிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

திரு. அஸீஸ் பேசுகையில் நாட்டின்கடைகளில் பொருட்கள் விலை ஏறிவிட்டது இதைத்தடுக்க தொழிலாளர்கள் கடைகளுக்கு முன் மறியல் செய்யுமாறு கேட்கப் போவதாகக் கூறிய அவர் நிதி அமைச்சரின் வரவு செலவுத்திட்ட உரை தமிழில் பிரசுரிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு நியாயமானதே. என்றும் இப்பொழுதும் காலம்சென்றுவிடவில்லை இனியாவது அவ்வுரையைத் தமிழில் வெளியிடலாம் என்றும் தெரிவித்தார்

## இலங்கைக்கு சமஷ்டி ஆடம்பரமானது

தியாகராசா

இலங்கைபோன்ற நாட்டுக்கு சமஷ்டி ஆட்சி உகந்ததல்ல. அது ஒரு ஆடம்பரமானது. எனவே, இந்தக் கோரிக்கையை சமஷ்டிவாதிகள் கைவிட்டு நாட்டுஒற்றுமைக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் பாடுபட முன்வரவேண்டும்.

இவ்வாறு இன்று வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் பேசுகையில் வட்டுக்கோட்டை ஆட்சிமன்றஉறுப்பினர் திரு. அ. தியாகராசா கூறினார்.

திரு. தியாகராசா தொடர்ந்து பேசுகையில், வரவு செலவுத் திட்டத்தில் கூறியதுபோல் மரவரியை நீக்கக்கூடாது. அதில் சில மாறுதல்கள் செய்யப்படவேண்டும், நாட்டில் பனம் பொருள் உற்பத்திக்கு அரசாங்கம் ஊக்கம் அளிக்கும் இவ்வேளையில் சீவல் தொழிலாளர்களின் ஒத்துழைப்பு அவசியம்தேவை என்றுகூறிய

(5-ம் பக்கம் பார்க்க)

## பேராதனைப் பல்கலைக்கழகம் பற்றி ஆராய ஆணைக்குழு

வரவுசெலவுத்திட்டத்தை எதிர்க்கவேண்டும் என்பதற்காக மாத்திரமே எதிர்க்கட்சியினர் எதிர்ப்பார்கள் நாட்டு மக்களுக்கு அவர்கள் ஆற்றவேண்டிய பணியிலிருந்து தவறியவர்களாவர் என்றுகல்வி அமைச்சர் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் தெரிவித்தார்.

நிதி அமைச்சர் டாக்டர் என்.எம். பெரேராவின் புதிய வரவுசெலவுத் திட்டத்தின்மீதான 6வது நாள் விவாதத்தில் கலந்து கொண்டு டாக்டர் மஹ்மூத் உரைநிகழ்த்தினார்.

எதிர்க்கட்சியினரும் அரசாங்கத் தரப்பினரும் மக்கள்மீது நம்பிக்கை வைக்க வேண்டும். அவர்களின்எதிர்கால நலனுக்கான பணிகளில் ஈடுபட வேண்டுமென்று கூறிய டாக்டர் பதியுதீன் எதிர்க்கவேண்டும் என்பதற்காக மாத்திரம் எதிர்க்கட்சி

5ம் பக்கம் பார்க்க

'ஆசிரியர்கள்

## கல்வித்திட்டத்தை ஏற்க தயாராக வேண்டும்'

—கல்வி அதிகாரி

பருத்தித்துறை, திங்கள்

புதிய கல்வித்திட்டத்துக்கமைய ஆசிரியர் தம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டிய அவசியமும் நிர்வாக உத்தியோகத்தர் அவற்றை அமுலாக்க ஆயத்தம் செய்துகொள்ள வேண்டிய கட்டமும் நெருங்கிவிட்டது.

இவ்வாறு உடுப்பிட்டிக் கல்வி வட்டார அதிகாரி திரு கே. இராசையா நேற்று மாலை நெல்லியடி மெதடிஸ்தமிஷன் பாடசாலையில் நடந்த ஆசிரியர்கள் தலைமையாசிரியர்கள் மகாநாட்டிற்குத்தலைமைவகித்துப் பேசும்போது குறிப்பிட்டார்

மேலும் அவர் கூறியதாவது. அடுத்த ஆண்டு தொடக்கம் 6-ம் வகுப்பிலிருந்து கணிதம் விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் போதிக்கப்படவிருப்பதால் கல்விப்பகுதி இதற்கான விஞ்ஞான உபகரணங்களை அடுத்த மாதம் 15-ம் திகதியளவில் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கும் போதிய கணித விஞ்ஞான ஆசிரியர் இல்லாவிடின் க. பொ.த, (உயர்தர) பரீட்சையில் இப் பாடங்களில் சித்திபெற்றவர்களை நியமிப்பதுடன் அவர்களுக்கு ஆறு மாதகால பயிற்சி அளிக்கவும் கல்விப்பகுதி உத்தேசித்துள்ளது. பயிற்றப்படாத சங்கீத, மனையியல் நடன, விவசாய ஆசிரியருக்கும் விடுமுறைக் கழகங்கள் நடாத்தப்படும்.

தெரிவுக் கல்லூரிகளில் அவ்வப்பகுதி மாணவருக்கு முதலிடம் கொடுக்கப்பட்டு எஞ்சிய வெற்றிடங்களே பிற மாணவருக்கு வழங்கப்படும். மேலும் பல பாடசாலைகள் ஒன்றாக இணைக்கப்படக்கூடிய அவசியமும் ஏற்பட்டுள்ளது. தொழிற் கல்வி போதிக்கக்கூடிய ஆசிரியர்கள் ஒவ்வொரு பாடசாலைக்கும் நியமிக்கப்படுவர். அதிபர்களுக்கு கூடுதலான அதிகாரங்களும் வழங்கப்படுமெனத் தெரிய வருகிறது.

நாகலிங்கம் சினிமா
சுன்னாகம்
தினசரி பி. ப. 4-30
சனி, ஞாயிறு 10-30
THE MOST BEAUTIFUL WOMAN OF THE WORLD

தினசரி, 6-30, 9-45
சனி ஞாயிறு 2-30
நெஞ்சில்ஓர் ஆலயம்

வெலிங்டன் சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-30, 10-00
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர் - வாணிஸ்ரீ
நடித்த
1000 பொய்

ஸ்ரீ கலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, இரவு 9-30
சிவாஜி - விஜயா
நடித்த
சரஸ்வதி சபதம்

சாந்தி சினிமா
(சங்கானை)
மாலை, 6-15, இரவு 9-30
ஞாயிறு பி. ப. 2-30
ஜெமினி-விஜயகுமாரி
நடித்த
மனைவி

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஆராதனாபுகழ் ராஜேஸ்கன்னா
நந்தா
நடித்த
தெ றெயின்
THE TRAIN
[ஹிந்தி ஈஸ்ட்மன்கலர்]

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, இரவு 9-30
விவசாயி

தினசரி 2-30, 6-30 சிவாஜி - ஜமுனா நடித்த
நிச்சய தாம்பூலம்

வின்ஸர்
யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர், ரவிச்சந்திரன், காஞ்சனா
நாகேஷ், பானுமதி,
தேங்காய் சீனிவாசன்
நடித்த
காதல் ஜோதி

லிடோ (யாழ்ப்பாணம்)
காலை 10-00, பி. ப. 2-00
மாலை 6-00, இரவு 9-30.

வெலிங்டன் திரைகளில்
தினசரி 2-30, 6-30, 10-00
சனி, ஞாயிறு 10-30

மக்கள்திலகம்
எம். ஜி. ஆர்.
கலைச்செல்வி
ஜெயலலிதா



மற்றும்



முத்துராமன்
விஜயநிர்மலா
அசோகன்
நம்பியார்
கீதாஞ்சலி
சோ
நடித்த
வீனஸ் பிக்சர்ஸ்
என் அண்ணன்
(ஈஸ்ட்மென் கலர் சித்திரம்)

## கேள்வி விளம்பரம்

### கிளிநொச்சிப் பட்டின சபை

கிளிநொச்சிச் சந்தை சமதானத்தில் மாட்டிறைச்சிக்கடைகள் மூன்றும், பன்றியிறைச்சிக்கடை ஒன்றும், கோழிக் கடை ஒன்றும் பரந்தன் சந்தை சமதானத்தில் மாட்டிறைச்சிக் கடை ஒன்றும் ஆட்டிறைச்சிக் கடை ஒன்றும் அமைத்து 1-1-72 தொடக்கம் 31-12-1972 வரை குத்தகையாக எடுத்து இறைச்சி விற்பனை செய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 1971ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2ம் திகதி முற்பகல் 10-00 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பிணைப்பணம் மாட்டிறைச்சி ஆட்டிறைச்சிக் கடைகளுக்கு ரூபா 50/-, கோழிக்கடை, பன்றியிறைச்சிக்கடைக்கு ரூபா 25/- கேள்விப்பத்திரப் பணம், மாட்டிறைச்சிக் கடை ரூபா 5/-, கோழிக்கடை பன்றியிறைச்சிக்கடை ரூபா 2/50. கேள்விப்பத்திரப்பணமும், (திருப்பி வழங்கப்படமாட்டாது) செலுத்தி 2-12-1971ந் திகதி முற்பகல் 10-00 மணிவரை இச் சபை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மற்றும் விபரங்களை பட்டண சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ச. சு. முருகேசு;
தலைவர்,
பட்டண சபை,
கிளிநொச்சி

பட்டண சபை
அலுவலகம்,
கிளிநொச்சி.
19-11-71 3158

## அறிவித்தல்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில்.
1. 5000 ந்திற்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகளும்,
2. கழிவு சீனியும்,
3. வேறு பொருட்களும்,

கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கிருக்கின்றன. ரூபா 250/- முற்பணம் செலுத்திக் கேள்விப்பத்திரங்களைச் சங்கத்தின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவேண்டும்.

26-11-71 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி வரையும் பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இங்ஙனம்
கூட்டுறவுச்சேவையிலுள்ள
க. இராமச்சந்திரன்,
3160 காரியதரிசி,

REGAL Jaffna
Daily 5-00, 7 15 p m.
Sat-Sundays 10-30 a.m.
Clint Eastwood
Richard Burton
in
WHERE EAGLE DARE

தினசரி பி. ப. 2-00, 10-00
சிவாஜி - தேவிகா
சரோஜாதேவி
நடித்த
குலமகள் ராதை
(புதிய செப்பி)

## வரி விளம்பரம்

மோட்டார் வாகனங்கள் மற்றும் சகலவிதமான யந்திரங்களுக்கும் உதிரிப்பாகங்கள் ஜேர்மனியில் பயிற்றப்பட்ட பொறியியலாளர்களின் மேற்பார்வையில் செய்துகொடுக்கப்படும். ராதா மெசின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3769

சகலவித நவநாகரிக நகைகளும், கோழிக்கினி வகைகளும் மருந்துச்சரக்குவகைகளும், வெவ்வேறு யந்திரங்கள் மூலம் அரைத்துக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு:- V. சிவானந்தன் மனோன்மணி மில்ஸ், 46/1 பிரவுண் ரோட், யாழ்ப்பாணம். 3694

M. G. M. குரக்கன்மா, கடலைமா, ஆட்டாமா, உழுந்துமா, கோப்பித்தூள், மஞ்சள் தூள் ஆகியவை எம்மிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். ஒதிப்பு- வியாபாரிகளுக்கு விஷேச சலுகை உண்டு முகவரி இரண்டிமில்ஸ், 443, கே.கே.எஸ்.ரோட் யாழ்ப்பாணம். 3754

### தேவை

சகல ஆசன வேலையில் அனுபவமுள்ள ஒருவரும், வேன் சேல்ஸ் அனுபவமுள்ள ஒருவரும். வேலை பழகுவதற்கு ஆர்வமுள்ள இளைஞர்களும் தேவை. எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். திறமைக்கேற்ப சந்தர்ப்பம் வழங்கப்படும். பிறேமா தொழிற்சாலை வி.எம்.ரோட், பருத்தித்துறை. 3340

### யாழ். மாநகர சபை அறிவித்தல்

மாநகரசபை அதிகார எல்லைக்குள் கட்டாக்காலி ஆடு, மாடுகள் பிடிப்போர் பதவிக்கான காலி ஸ்தானங்கள்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் 21 வயது முதல் 45 வயது வரையுள்ள திடசாலியும், சுகதேகியுமான ஆண்களிடமிருந்து 1971-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 26-ம் திகதி நண்பகல் 12-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேல் விபரம் காரியாலய நேரத்தில், மாநகரசபை மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

(ஏ. ரி. சுந்தரம்.)
மாநகர ஆணையாளர்.
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
19-11-71 3159

## வைத்தியம்

வாதம், ரத்தி, தொய்வு ஆகிய வியாதிகளை முற்றாகக் குணப்படுத்துவதில் திறமை பெற்ற டாக்டர் எஸ். வல்லிபுரம் (D. A. M.) தங்க பாஸ்கரன் வைத்தியசாலை, இராசாவீதி, நல்லூர் மார்க்கெட், யாழ்ப்பாணம். 3748

## விற்பனைக்கு

மணி மார்க் வரகு அரிசி குரக்கன் மா என்று கேட்டு வாங்கிப் பாவியுங்கள். போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள். P. முத்தையா, வசந்தா இன்டஸ்றீஸ், நாவலடி லேன், வண் மேற்கு- யாழ்ப்பாணம். 3706

ராதா கேசரிப் பவுடர் மனோரம்மியமான வாசனை கொண்ட கேசரிப் பவுடர் கேக்களிலும், விழாக்களிலும், கோடைத் தயாரிப்பதற்கும் மிகவும் உபயோகமானது. எஸ். சுப்பிரமணியம் கொம்பனி 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், 160, செட்டியார் தெரு. கொழும்பு 3708

நீர்ப்பாசன வசதியுள்ள இரண்டு போக விளைச்சல் நெற் காணியும், தோட்டக் காணியும் அக்கராயன் குளப் பகுதியில் பெற விரும்புவோர், யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி 27-ம் நம்பரில் உள்ள சி. வி. மார்ஸ்தானை மனேச்சரிடன் தொடர்பு கொள்ளவும் 3756

தென்மராட்சிப் பகுதி வரணி இயற்றாலையில் அத்தாய சிமா. அத்தாய சத்த ளவு ஆகிய 7 15/16, 17 7/8 நிலப் பரப்பைக் கொண்ட இரு காணிகள் விற்பனைக்குள்ளன. தொடர்பு கொள்ளவும். முத்தையா திருவடுட்தேவன், ஓம்வாசா கரவெட்டி மேற்கு, கரவெட்டி. 3761

கச்சேரி நல்லூர் வீதி, குருசெற் ஒழுங்கை, 7-ம் இலக்க வளவும், வீடும். இரண்டரைப் பரப்பு. வாண்ட் இன்வெஸ்ட் மெண்ட், 6, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7453. 3758

2/100 லைப் நூல் இல்லாது கஷ்டப்படுகிறீர்களா? எம்மிடம் 50-ம் நம்பர் சிங்கிள் நூல் பசையிட்டு விற்பனைக்கிருக்கின்றது. தொடர்புகொள்ளவும் ஸ்ரீ முருகன் சாயத்தொழிற்சாலை, சாவகச்சேரி. 3762

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

சேர் பொன்னம்பலம் இராமநாதன்
அவர்கள்
குரு பூசை விழா

விரோதிகிருது ஆண்டு கார்த்திகைத் திங்கள் 8 ஆம் நாள் (24-11-71) புதன்கிழமை இராமநாதன் கல்லூரியில் காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்

இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்.
22-11-71.

அதிபர்,
ஆசிரியர், மாணவர்.
3161

மனோஹரா—
யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ ரங்கராவ் ★ சோபன்பாபு
★ வாணிஸ்ரீ ★ விஜயலலிதா
நடித்த
துப்பாக்கியே துணை
விஜயலலிதாவின் கவர்ச்சி நடனங்கள், மயிர்க்கூச்செறியும் சண்டைக் காட்சிகள் நிறைந்த துப்பறியும் தீந்தமிழ் சித்திரம்.

## 19 பேர் கொல்லப்பட்டனர்: 160 பேருக்குக்காயம்

# பாக். பகுதியில் ஊடுருவிய இந்திய ராணுவ அணி துரத்தப்பட்டதாம்

## விடுதலைப் படையினருக்கு பலஇடங்களில்தொடர்ந்துவெற்றி

ராவல்பிண்டி, நவ 22

கிழக்குப் பாகிஸ்தானுக்குள் ஊடுருவல்செய்த இந்திய ராணுவ அணி ஒன்றை அடித்து துரத்திவிட்டதாக பாகிஸ்தான் ராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

ஜெசூர் நகருக்கு வடமேற்கில் இந்தச் சம்பவம் ஏற்பட்டதாம்.

இந்திய சிப்பாய்கள் 19 பேர் கொல்லப்பட்டதாகவும் 160 பேர் காயமடைந்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேசமயம் கிழக்குப் பாகிஸ்தானின் மூன்றில் ஒரு பகுதியை விடுதலைப் படையினரிடம் ராணுவத்தினர் இழந்துள்ளதாக இந்திய செய்திகள் கூறுகின்றன.

எல்லைப்பகுதியில் தொடர்ந்து இருதரப்புகளுக்குமிடையே மோதல்கள் இடம்பெறுவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

### பல இடங்கள் வீழ்ச்சி

கிழக்கு வங்காளத்தில் விடுதலைப் படையினர் மேலும் பல இடங்களை மேற்கு பாகிஸ்தான் ராணுவத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுவித்திருக்கிறார்களாம்.

ராணுவத்தினருக்கும் விடுதலைப் படையினருக்குமிடையில் நடைபெற்ற கடும் சண்டைகளின் பின்னர் ராணுவம் பல இடங்களில் பின்வாங்கிச் செல்வதாகவும் விடுதலைப்படையினரின் ஓர் அணி இப்பொழுது குல்னு நகரை நோக்கி முன்னேறிக் கொண்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. எல்லை நகரான காலிகஞ்சை விடுதலைப்படையினர் விடுவித்திருக்கிறார்கள். ஆசுராவுக்கு சுமார் 12 கிலோமீட்டர் தொலைவிலுள்ள முகுந்தபூர் நகரும் விடுதலைப்படையினரிடம் வீழ்ச்சியடைந்துள்ளது.

கிழக்குப் பாகிஸ்தானின் மூன்றில் ஒரு பகுதி இப்பொழுது ராணுவத்தின் ஆதிக்கத்திலில்லையென்று தெரிவிக்கப்படுகின்றது. கடந்த சில தினங்களாக விடுதலைப் படையினருக்கும் ராணுவத்தினருக்குமிடையில் நடைபெற்ற கடும் மோதல்களின் காரணமாக ராணுவத்தினருக்குப் பலத்த சேதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. விமானங்களின் ஆதரவுடன் ராணுவத்தினர் தாங்கிகளாலும் பீரங்கிகளாலும் நடத்திய தாக்குதல்களை விடுதலைப் படையினர் முறியடித்துள்ளார்கள். விடுதலைப்படையினரின் மூர்க்கமான தாக்குதல்களை சமாளிக்க முடியாமல் ராணுவம் பல இடங்களிலும் பின்வாங்கியுள்ளது.

டாக்கா நகரின் கிழக்குப் பகுதியில் கெரில்லாக்களின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. இங்கு பல இடங்களிலும் அடிக்கடி குண்டுகள் வெடித்த வண்ணம் இருக்கின்றன.

---

மட்டுநகர் அரசாங்க அதிபர்

## நேசையா லண்டனில் பயிற்சி பெறுகிறார்

லண்டன், நவ.22

மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, அபிவிருத்திப் பொருளியலில் மாஸ்டர் பட்டத்துக்குப் படிப்பதற்காக பிரிட்டன்வந்துள்ளார்.

சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகளுக்கு நிர்வாக, பொருளாதார அபிவிருத்தித்துறையில் பயிற்சி அளிக்கும் திட்டத்தின்கீழ் அரசாங்கம் இவரை இங்கே அனுப்பியுள்ளது.

கடந்த மாதம் சஸெக்ஸ் பல்கலைக்கழகத்தில் படிப்பை ஆரம்பித்துள்ள திரு நேசையா, பிரிட்டனில் ஒரு வருடம்வரை தங்கிப்படிப்பை முடிப்பார். கொழும்புத் திட்ட தொழில்நுட்பக் கூட்டுறவின் கீழ் பிரிட்டன் இவரது பயிற்சியை அளிக்க முன்வந்திருக்கிறது.

மட்டக்களப்பு அரசாங்க அதிபராக நியமிக்கப்படுவதற்கு முன் திரு நேசையா 1965 முதல் 1968 வரை மன்னார் அரசாங்க அதிபராக கடமையாற்றினார். அதற்கு முன் பேராதனை, சுகாதார அமைச்சுகளில் உதவிச் செயலாளராக அவர் கடமையாற்றி இருக்கிறார்.

---

### நிறைவு விழா

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் பத்திரகாளி அம்மன் கோவிலில் முதலாவது ஆண்டுப்பஜனை நிறைவு விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. விழாவுக்கு ஆசிரியர் திரு கே. நடராசா தலைமைவகித்தார். செல்வி நடராசா கிரிஜாவின் பக்திப்பாடலை அடுத்து விசேட பூசையும் நடைபெற்றது. "தேவியைத் தொழுவோம்" என்னும் பொருள்பற்றி சமயப் பிரசாரகர் இரா. சிவசுப்பிரமணியம் சிறப்புரையாற்றியதுடன் திரு க. வாமதேவன் வரவேற்புரையும் நிகழ்த்தினார்.

---

# அமெரிக்காவுடனான எல்லா பேச்சுக்களுக்கும் முற்றுப்புள்ளி

### அதிபர் சதாத் அறிவிப்பு

கெய்ரோ, நவ. 22

சூயஸ்கால்வாயைத் திறப்பது சம்பந்தமாக அமெரிக்காவுடனான சகல சமாசப் பேச்சுக்களுக்கும் முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுவிட்டதாக எகிப்திய அதிபர் அன்வர் சதாத் தெரிவித்துள்ளார்.

விமானப்படை வீரர்கள் மத்தியில் பேசிய அதிபர் அமெரிக்க தீர்வுக்கு இனி மேலும் சந்தர்ப்பம் இல்லை. பிரச்னை தீர்வதற்கு யுத்தம் தான் மார்க்கம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இனிவரும் சண்டைகளில் எகிப்திய விமானப்படை பெரும் பொறுப்பு எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அதிபர் சதாத்தின் இந்தக் கருத்து குறித்து இஸ்ரேல் தலைவர்கள் பரபரப்பு அடைந்திருப்பதாகத் தெரிகிறது. அரசியல் ரீதியிலும் யுத்தரீதியிலும் அதிபர் சதாத்தின் பேச்சை இஸ்ரேல் பாரதூரமாகக் கருதுவதாக இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் திரு. ஆபா ஈபான் கூறியிருக்கிறார்.

---

### மின்சார சபை வழங்கும்

குருநகர், திங்கள்

நாரந்தனைக் கிராமசபை எல்லைக்குள் இருக்கும் பொதுமக்களின் வேண்டுதலுக்கமைய நாரந்தனைக் கிராமசபைப் பகுதிக்கு மின்சாரம் கொடுப்பதற்கு மின்சாரசபை நடவடிக்கை எடுத்துவருகின்றது.

இப்பகுதிக்கான மின்விநியோகம் செய்வதற்கு நாரந்தனைக் கிராமசபைக்குப் போதிய வசதி இல்லாததினுல் இப்பகுதிக்கான மின்விநியோகத்தை மின்சார சபையே மேற்கொள்ளும்.

---

# பாகிஸ்தான் கூறுவதில் உண்மையில்லை

### 'இஸ்வெஸ்தியா' கண்டனம்

மாஸ்கோ, நவ 22

கிழக்குப் பாகிஸ்தான் பிரச்னையைத்தீர்க்க இஸ்லாமாபாத் செயலூக்கமான நடவடிக்கை எடுப்பதாகக் கூறுவது உண்மையல்ல வென்று சோவியத் அரசாங்கப் பத்திரிகையான 'இஸ்வெஸ்தியா'வில் பிரசுரமாகியுள்ள வஸிலி கொந்தரஷோவ் என்பவரின் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய பாகிஸ்தான் எல்லையில் நிலைமை குறிப்பிடத்தக்கமுறையில் ஷீணித்துள்ளதாகப் பிரஸ்தாபிக்கும் 'இஸ்வெஸ்தியா' கட்டுரை 'சமாதானப் பிரச்னை' கொண்ட வங்காள மக்களுக்கு எதிராகப் பாகிஸ்தான் துருப்புகள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்துதான் தென்னாசியாவின் இருபெரும் நாடுகளுக்கிடையிலான பதட்டம் தோன்றியது என்றும் கிழக்குப்பாகிஸ்தான் பிரச்னை, போர்மூலம் தீர்க்கப்பட முடியாது என்பதை நிதான சிந்தனை படைத்தோரும் அங்கீகரிப்பர் என்றும் சுட்டிக்காட்டுகிறது.

---

## பிரி. வெளிநாட்டு உதவியில் 50 சத விகித அதிகரிப்பு

லண்டன், நவ. 22

ஐ. நா. பொதுச் சபை 1970-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் அடுத்த பத்தாண்டுகளுக்குரிய அபிவிருத்தித் திட்டத்தை அங்கீகரித்ததை அடுத்து பிரிட்டனில், அதன் வெளிநாட்டு உதவித் திட்டம் சம்பந்தமாக கருகருப்பு ஏற்பட்டுள்ளது ஐரோப்பிய கூட்டணியில் சேர்வதன் நிமித்தம், பிரிட்டனின் வெளிநாட்டு உதவித் திட்டம் பாதிக்கப்படுமா என்ற கேள்வியும் சில வட்டாரங்களில் எழுந்துள்ளது.

இக்கேள்விக்கு நான்கூறும் பதில் "இல்லை" என்பதாகும். உண்மையில் ஐரோப்பிய கூட்டணியின் அங்கத்துவ நாடு என்றவகையில் பிரிட்டன் இன்னுமிகூடுதலாக உதவி வழங்கக்கூடிய நிலையில் இருக்குமென்றே நான் கருதுகின்றேன், என்று பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தித்துறை அமைச்சர் திரு. ரிச்சார்ட்வூட் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் அபிவிருத்தி தொடர்ந்து ஏற்பட உதவுவதற்கு பிரிட்டன் தன்னை முற்றிலும் அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறது. இரண்டு விதங்களில் இவ்வுதவியை அளிக்க முடியுமென பிரிட்டன் நம்புகிறது. ஒன்று தனது உதவியை அதிகரிப்பது; மற்றது அபிவிருத்தி அடையும் நாடுகளில் முதலீடு செய்ய தனியார் துறையைத் தூண்டுவது, என்கிறார் அவர்.

பிரிட்டனின் நிதி வருடம் ஒவ்வோராண்டும் ஏப்ரலில் ஆரம்பமாகித் தொடர்ந்து வரும் மார்ச் இறுதியில் முடிவடைகிறது. 1970-71 நிதி ஆண்டில் உத்தியோகபூர்வமாக வெளிநாட்டு உதவிக்காக 22 கோடியே 63 லட்சம் பவுணை பிரிட்டன் ஒதுக்கியிருக்கிறது. 1974-75-ம் நிதியாண்டில் வெளிநாட்டு உதவிக்காக 34 கோடி பவுணை ஒதுக்கும்படி பாராளுமன்றம் கோரப்படும் என்று அண்மையில் அரசாங்கம் அறிவித்துள்ளது. இது வெளிநாட்டு உதவிக்கு ஒதுக்கப்படும் தொகையில் ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பாகும், என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இரண்டாவது உலகப் போர் முடிவின் பின் அதாவது 1946-ம் ஆண்டில் இருந்து பிரிட்டன் நேரடியாக வழங்கியுள்ள உதவி 250 கோடி பவுணாகும்; இப்பெரு நிதியில் ஐந்தில் நான்கு பங்கு சாம்ராஜ்ய நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இன்னும் இதே பங்கைத் தான் சாம்ராஜ்ய நாடுகள் பெற்று வருகின்றன. எதிர் காலத்தைப் பொறுத்தவரை வெளிநாட்டு அரசாங்கங்கள் கோரும் அவசர உதவிகளைச் செய்துதர நாம் இயன்றவு முயல்வோம் என்பதை குறிப்பிட விரும்புகிறேன், என்று குறிப்பிட்டுள்ளார்.

---

## சீனாவின் நிலைபற்றி இந்தியாவுக்கு கவலையில்லை

—இந்திரா

புதுடில்லி, நவ.22

ஐ. நா. வில் கிழக்குவங்காளம் சம்பந்தமான நவசீனம் மேற்கொள்ளும் நிலைகுறித்து இந்தியா கவலைப்படவில்லை. சீனாவின் இந்த நிலை எதிர்பார்க்கப்பட்டதுதான் என்று பாரதப்பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தி கூறியிருக்கிறார்.

ஐ. நா. வில் சீனு கடைப்பிடிக்கும்நிலையின்காரணமாக சீனுவின்பால் இந்தியாவின் போக்கு மாருது என்றும் அவர் தெரிவித்தார்.

ஆதமாபாத்தில் நேற்று திருமதி இந்திராகாந்தி நிருபர்களிடம் பேசினுர்.

இந்தியாவுடன் யாஹ்யாகான் தப்பு பாராட்டியிருப்பது பற்றி கேட்டபோது, கடந்த 24 ஆண்டுகளாக பாகிஸ்தானுடன் நட்புக்கொள்ளவே முயன்றுவந்துள்ளோம். ஆனுல் பாகிஸ்தான் அதனைப் புறக்கணித்தே வந்துள்ளது என்றார்.

இந்தியாவின் பாதுகாப்புக்கு பெரும் சவால் ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில் அதனை எதிர்த்து சமாளிக்க இந்திய மக்கள் தயாராய் இருக்கவேண்டுமென்று அவர் குறிப்பிட்டார்.

---

### பிரிவுபசாரம்

சங்கானை, செவ்

வலிகாம கூட்டுறவு உதவி ஆணையாளராக கடமையாற்றிய திரு. எஸ். இராமநாதன் யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளராக இடமாற்றம் பெற்றுள்ளார். இவருக்கு பிரிவுபசார வைபவம் க. ப. கல்லூரியில் நடாத்தப்பட்டது.

# 'பஸ்களில் ஆண்கள் பெண்களுக்கு இடம் கொடுக்கவேண்டும்'

யாழ்ப்பாணம், செவ். 'கொடிகாமம் யாழ்ப்பாணம் பஸ் சேவையை இபோச கோண்டாவில் டிப்போ இப்பொழுது திருப்திகரமாகவே செய்துவருகின்றது. இது தொடர்ந்து ஒழுங்காக நடைபெறவும், அரசாங்க உத்தியோகத்தர் நீண்டநேரம் காலையில் வழியில் பஸ் எடுக்கமுடியாது கஷ்டப்படுவதைத் தவிர்க்கவும் அதிகாரிகள் இடையில் பரிசோதிக்க வேண்டும்'

இவ்வாறு தென்மராட்சிப் பஸ் பிரயாணிகள் சங்கம் போக்குவரத்து இலாகாவுக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளது.

பெண்களுக்குரிய இடங்களில் இருக்கும் ஆண்கள் பெண்யாத்ரீ பிரயாணம் செய்யவந்ததும் இடம் கொடுக்க வேண்டுமென்றும் இதைப் பஸ் ஊழியர்கள் மேற்பார்வையில் செய்ய வேண்டுமென்றும் கோரப்பட்டுள்ளது.

பஸ் தரிப்புநிலையங்களிலும் பஸ்ஸிலும் பிரயாணிகளுக்கு இடைஞ்சலாகவிருப்பவர்களை கவனமெடுத்து ஒழுங்கு நிலைநாட்டவேண்டுமென்றும் கோரப்பட்டுள்ளது. (கு வி ம)

## பஸ்சேவை சீர்கேடு

அம்பன், திங்கள் பருத்தித்துறை- தாளையடி- ஆழியவளை பஸ்சேவை அடிக்கடி சீர்கேடு அடைவதால் இப்பகுதிக்குப் பிரயாணம் செய்யும் மக்கள் பெரிதும் கஷ்டப்படவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

போக்குவரத்து வசதி குறைந்த மேற்படி பாதையில் இரண்டு பஸ் மாத்திரமே சேவையிலீடுபட்டுள்ளன. ஒரு பஸ் பழுதடைந்தால் அதற்குப் பதில் வேறு பஸ் விடுவது இல்லையாது. இதனால் பருத்தித்துறையிலிருந்து 30 மைல்களுக்கப்பாலுள்ள ஆழியவளைக்குச் செல்லும் பிரயாணிகள் கணிக்கணக்கில் பருத்தித்துறைபஸ்நிலையத்தில்காத்து நின்று அவதியுறவேண்டிய நிலை ஏற்படுகின்றது. இப்பகுதிமக்கள், பஸ்சீர்கேடு பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முறையீடுசெய்தும் அதுபற்றி அவர்கள் சிரத்தை எடுத்ததாகத் தெரியவில்லையாம்.

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

செவ்வாய்க்கிழமை 23-11-71)

(செய்திகள்: காலை 6-30. பகல் 12-45 மாலை 6-00. இரவு 9-00)

294 மீ அலை 59 மீ காலை 6-15 நாதாஞ்சலி, 6-20சைவநற்சிந்தனை, 6-25இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 விகடவிருந்து. 7-15 நற்பாடல்கள், 7-30 குரல் வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய நிகழ்ச்சி.

இரவு 6-10வாத்திய இசை 6-15 அகல்விளக்கு, 6-30 வீணை, 7-00 தமிழ்மூலம் சிங்களம், 7-15 கமமும் புலமும் 7-30 வெளிநாட்டுச் செய்திகள், 7-35 மெல்லிசைப் பாடல்கள், 7-45 பேச்சு, 8-00 மூவின நிகழ்ச்சி 9 30 கலைக்கோலம் 10-00 நேயர் விருப்பம்

—

# நெடுந்தீவில்—

(-4ம் பக்கத் தொடர்ச்சி)

கலையரசினி சங்கீத பூஷணம் திரு வே சுந்தரலிங்கத்தின் இசைக்கச்சேரியும் திருநெல்வேலி கலைக்கோவில் நாட்டிய நிருவன இயக்குனர் வேல் ஆனந்தனதும் அவர்களது மாணவிகளினதும் நாட்டிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இறுதி நிழ்ச்சியாக நடைபெற்ற நாடக அரங்கில் பல நாடகங்கள் மேடையேற்றப்பட்டன.

கடல்கடந்து வாக்காலத்திலும் விழாவிற் பங்குபற்றிய வர்களை நிர்வாகிகள் பாராட்டினர் இவ்விழாவுக்கு அரசாங்க அதிபர், யாழ்ப்பாண எம் பி திரு வி எக்ஸ். மார்ட்டின், காங்கேசன் துறை எம் பி திரு எஸ். ஜே வி செல்வநாயகம் உட்படப் பல பெரியார்கள் ஆசி அனுப்பியிருந்தனர்.

—அன்பன்

இலங்கை பற்றிய

## அஞ்சல் தொகுப்புக்கு பாராட்டுப் பதக்கம்

லண்டன், நவ. 22

இலங்கை அஞ்சல் துறையின் வரலாற்றை ஆராயும் அஞ்சல் தலைகள், அஞ்சல் அட்டைகள், உறைகள் கொண்ட அஞ்சற் தொகுப்பொன்றிற்கு லண்டனில் பாராட்டுப் பதக்கம் ஒன்று கிடைத்துள்ளது.

1971ம் அஞ்சல்தலை சேகரிப்பாளர் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த இலங்கைத் தொகுப்பு இலங்கையின் அஞ்சற்துறை வளர்ச்சியை 19ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் இருந்து 1860ம் ஆண்டுவரை ஆராய்கிறது. செய்மூர் மண்டபத்தில் நடந்த இக்கண்காட்சியில் 250 நாடுகளைச்சேர்ந்த அஞ்சல் தொகுப்புகள் இடம்பெற்றிருந்தன இலங்கைத் தொகுப்பின் உரிமையாளர் நோதம்டனைச் சேர்ந்த திரு ஜி எப் ஒல்லிவாவர்.

## 'சுத்த வேதனம் வேண்டும்'

சேதீஸ்வரம், திங்கள் உள்ளூராட்சிசேவையிலில்லாத ஊழியர்களில் பலர் கல்வித்தராதரத்திலும் சேவையிலும் தகுதியுடையவர்களாயிருந்தும்இன்னமும் உள்ளூராட்சி சேவையில் சேர்த்துக்கொள்ளப் படாதிருக்கிறார்கள். உள்ளூராட்சி சேவையிலல்லாத ஊழியர்கள் செய்யும் வேலைகளையே உள்ளூராட்சி சேவையிலுள்ள ஊழியர்களும் செய்து வருகிறார்கள். ஆனால் சேவையிலல்லாதஊழியர்கள் மிகவும் குறைந்தஊதியத்தையே பெறுகின்றனர். ஆதைச் சமமாக்கி ஒத்த வேதனம் தரல் வேண்டும்.

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை இலுப்பைக்கடவை கிராமசபைத் தலைவர் திரு. வே. கயிலாசபிள்ளை உள்ளூராட்சி உள்நாட்டு உதவி அமைச்சர் திரு. நீல் டி. அல்விஸிடம் சமர்ப்பித்தள்ளார்.

சமீபத்தில் மன்னார் மாவட்டத்திற்கு உத்தியோகபூர்வமான விஜயம் ஒன்றை மேற்கொண்டபோதே உள்ளூராட்சி சேவையிலல்லாத ஊழியர்களின் குறைபாடுகளைக்கூறி அவற்றை நீக்குமாறு கோரும்கோரிக்கைகள் சார்பாக மேற்படி மகஜர் அவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

## விசாரணை செய்ய அதிகாரி

ஒருதர், திங்கள் அரிகாலற்றுறைப் பட்டின சபையின் நிர்வாகம் சம்பந்தமான குறைபாடுகளை நீக்க நடவடிக்கை எடுக்குமாறு மேற்படி பட்டின சபையின் உறுப்பினர்கள் சிலர் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. தில்லநாதனைக் கேட்டுக்கொண்டனர். இக்குறைகளை நேரில் பார்வையிடுவதற்கும், விசாரணைநடத்துவதற்கும் அதிகாரி ஒருவரை உதவி ஆணையாளர் அனுப்பிவைத்துள்ளார்

மகாஜனசம்பத கனிப்

## யாழ். கொய்யாத் தோட்ட வாசிக்கு முதல் பரிசு

கொழும்பு, திங்கள் கடந்த மாதம் 31-ந்திகதி இடம்பெற்ற மகாஜன சம்பத சீட்டிழுப்பில் 1-வது பரிசை திரு. பி. எச். இம்மானுவேல் தேடிவந்து பெற்றுக்கொண்டார். 6 பிள்ளைகளின் தந்தையும் புகையிரத இலாகாவில் வேலை பார்ப்பவருமான இவர் யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்தவர். தன் குடும்பத்தின் ஆக்கத்திற்கு இப்பணத்தை உபயோகிக்க எண்ணியுள்ள இவர் யாழ்.சம்பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. பரிசுத்தொகை ரூ. 65,000 மாகும்.

## பேராதனை...

1ம் பக்கத்தொடர்ச்சி யினர் இத் திட்டத்தை எதிர்க்கக்கூடாது. அப்படிச் செய்தால் மக்களுக்கு அவர்கள் ஆற்ற வேண்டிய கடமையிலிருந்து தவறியவர்களாவார்கள்.

நில உச்சவரம்பு பற்றி குறிப்பிட்ட டாக்டர் மஹ்மூத் இத்திட்டத்தினால் பிரதம மந்திரி தனிப்பட்ட முறையில் பாதிக்கப்பட்ட போதிலும் நாட்டு மக்களின் நன்மையைக் கருதி இது கொண்டுவரப் பட்டிருக்கின்றது என்றார்.

பேராதனைப் பல்கலைக் கழகம் பற்றி ஆராய்வதற்காக ஆணைக்குழுவொன்று விரைவில் நியமிக்கப்படும் என்றும் அவர் கூறினார். கல்வி அபிவிருத்திக்கான திட்டங்கள் பற்றியும் அவர் விளக்கினார்.

மேலும் அவர் பேசுகையில் ஜி. இ சில்வா முறையில் இருந்த "பீ" பாடத்திட்டத்தை ஐ தே கட்சி நிறுத்தியது ஆனால் அதைத் திரும்பவும் கொண்டுவந்தது இந்த அரசாங்கம் மாணவ ஆசிரியர்களுக்கு சம்பளமாக 150 ரூ கொடுத்த ஐ தே கட்சி அரசாங்கம் அவர்கள் வேலையையும் தற்காலிகமாக வைத்திருந்தது ஆனால் இந்த அரசாங்கம் அவர்களின் சம்பளத்தை கட்டியதோடு வேலையையும் நிரந்தரமாக்கியது என்றார்

## இலங்கைக்கு...

1ம் பக்கத்தொடர்ச்சி அவர் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் ஐந்தாண்டுத் திட்டத்தில் நாட்டில் ஒரே பல்கலைக்கழகம் அமைக்கப்படுமென்ற உறுதிப்பாட்டைக் குறிப்பிட்டுப் பாராட்டியதோடு, யாழ்ப்பாணத்திற்கு பல்கலைக்கழகத்தின் ஒரு துறையை அமைக்கலாம் என்று ஆலோசனை கூறினார்.

திரு. திபாஜராசா, வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட மிளகாய், வெங்காய இறக்குமதித்தடையை வரவேற்றதோடு, இந்த வரவு செலவுத் திட்டம் நாட்டை சோஷலிசப் பாதையில் செலுத்துவதற்கான முதல்படி என்றும், இதற்கு எதிர்க்கட்சியினரும் தங்கள் ஒத்துழைப்பை தரவேண்டும் என்றும் தெரிவித்தார்.

## பெண் நியமனம்

முல்லைத்தீவு, திங்கள் முல்லைத்தீவு புதிய கிராமிய வங்கியின் முகாமையாளராக செல்வி மகேஸ்வரி சுப்பிரமணியம் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இலங்கைப் பல்கலைக்கழகப் பட்டதாரியாவார்.

# ராவ் யோசனைகளை உறுதிப்படுத்த கோரிக்கை

கொழும்பு, திங்கள் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே மின்சாரம் இணைக்கும் திட்டம் பற்றிய இந்திய மின்சார அமைச்சர் டாக்டர் கே. எல். ராவின் யோசனைகளை இலங்கை ஏற்றுக்கொண்டதை உறுதிப்படுத்தி அறிவிக்குமாறு இலங்கையை இந்தியாகேட்டுக்கொண்டிருப்பதாக அறியப்படுகிறது.

திரு. ராவ் இலங்கையை விட்டு புறப்படுவதற்கு முன்னாக, நீர்ப்பாசன மின்சார நெடுஞ்சாலை அமைச்சர் திரு மைத்திரிபால சேனநாயக்காவிடம் இதுபற்றிய மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்திருந்தார் என அமைச்சு வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

சமநிலவேலை நீர் வீழ்ச்சி மின்சாரத்துடன் இந்திய மின்சாரத்தையும் இணைப்பதுபற்றி திரு. ராவ் முக்கியமாகக் குறிப்பிட்டிருந்ததாகத் தெரிகிறது. (இ. பி. ஏ)

மரவரி ரத்தானால்

# சிறுபான்மைத் தமிழர் சமுதாயத்தில் பின்தங்குவர்

தெல்லிப்பழை, செவ். மரவரிமுறையை ஒழித்து தவறணைமுறையைக் கொண்டுவந்தால், சிறுபான்மைத் தமிழர்கள் கல்வி, பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்க வேண்டிய நிலைமை ஏற்படும். ஆதலால் மரவரி முறையை தொடர்ந்து நீடிக்கச் செய்ய வேண்டுமென்று பிரதமரிடமும், நிதியமைச்சரிடமும் கோரும் தீர்மானமொன்று அகில இலங்கை சிறுபான்மைத்தமிழர் மகாசபை காங்கேசன்துறைக் கிளைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கவிஞர் சிவானந்தாசனசமூக நிலையத்துக்கு சாமையில் திரு.வி. மாணிக்கம் தலைமையில்நடைபெற்ற இக்கூட்டத்தில் கைத்தறிநெசவு தொழிலையே ஜீவனோபாயமாகக் கொண்டுவாழும், நெசவாளர்கள் இப்பொழுது நெய்வதற்கு நூலின்றி மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆதலால் போதுமான நெசவு நூல்களைத் தருவித்து, எமக்கு உதவும் வரைக்கும், வாழ்க்கைச் செலவுக்கென அரசாங்கத்திடமிருந்து அலவன்ஸாக பணஉதவி பெற்றுத்தருமாறு, பிரதமந்திரி திருமதி பண்டாரநாயக்காவையும் கைத்தொழில் மந்திரியையும், மகாசபைத் தலைவரும், நியமன எம். பி. யுமான திரு. எம். சி. சுப்பிரமணியத்தையும் கோரும் தீர்மானமொன்றும் நிறைவேற்றப்பட்டது.

## பிரசாரக் கூட்டம்

மட்டுவில், திங்கள் சாவகச்சேரி டிறிபேர்க்கல்லூரியில் இம்மாதம் 26-ம் திகதி புதுக் கல்வித்திட்டம்பற்றிய பிரசாரக் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. தென்மராட்சித் தலைமையாசிரியர்களால் இக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மாவட்டக் கல்வி அதிகாரியின் தலைமையில் நடைபெறும் எனத் தெரிகிறது. வட்டாரக் கல்வி பரிசோதகர் திரு சுந்தரசாமியும் கலந்துகொள்வார்.

விஸ்வமடுவில்

## பயிரிடும் நிலையில் காடுகள்

கிளிநொச்சி, திங்கள் புதிதாக விஸ்வமடுவில் குடியேற்றப்பட்ட வாலிபர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட காடுகளையெல்லாம் வெகுசிக்கிரத்தில் வெட்டி துப்பரவு செய்து பயிரிடும் நிலைக்கு ஆக்கியுள்ளனர். இவர்களுடைய ஆக்கமுயற்சிக்குப் பங்கம் ஏற்படாத வகையில் அரசாங்கம் நீர்ப்பாயும் வடிவாய்க்கால் அமைப்பு வேலைகளை மேற்கொண்டுள்ளது. தைமாதம் ஒவ்வொரு காணிகளுக்கும் நீர்வழங்கப்படவுள்ளது.

—

பருத்தித்துறை, திங்கள் பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் நேற்றுமுன் தினம் அதிபர் திரு. ஜீ. என் எட்வேட் தலைமையில் நடந்த கலைவிழாவில் 'நெஞ்சே நீ சொல்' என்ற நாடகம் முதலிடத்தைப் பெற்றது.

திரு. க நவரத்தினம் அளித்த 'ஊத்தைப் பொம்மன்' என்ற நகைச்சுவை நாடகம் ஏகோபித்த பாராட்டைப் பெற்றது. 'சந்திப்பு' என்ற நாடகமும் பாராட்டப்பட்டது

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## கேள்வி அறிவித்தல்

### குத்தகைகள்—1972

1972-ம் வருடத்திற்கு கீழ்க்காணும் குத்தகைகளுக்குரிய கேள்விகள் மாநகர சபை ஆணையாளரால் 30-11-71 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்திலிருந்து பெறப்படும் விதித்த படிவங்களில் தயாரிக்கப்பட்டு இணைப்பிரதிகளில் அனுப்பப்படல் வேண்டும். கேள்வி நிபந்தனைகள், கட்டுப்பண விபரம் முதலியவற்றை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

(1) அரியாலைச் சந்தை (பழையது)
(2) அரியாலைச் சந்தை (புதியது)
(3) பாஷையூர்ச் சந்தை
(4) பாஷையூர்ச் சந்தை கடை இலக்கம் 1
(5) பாஷையூர்ச் சந்தைக் கடை இலக்கம் 2

ஏ. ரி. சுந்தரம்,
மாநகர ஆணையாளர்.
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்,
22-11-71. 316


மரவள்ளிக்கிழங்கு
தேவை

தொடர்பு கொள்ளவும்:-

ஸ்ரீ லங்கா டப்பியோகா புறடக்ஸ்
C/O சுந்தரம் பிறதர்ஸ்,
73, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

### மணிவாசகம்

கல்வியின் இலட்சியம் பொருள்களை அறிவது மட்டுமன்று வேலைக்கு அடிகோலுவதும் அன்று. சான்றோனாகவும் அறிஞனாகவும் ஆக்குவதேயாகும். —ரஸ்கின்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 380
[illegible] விரோதிகிருது வருஷம் கார்த்திகை மாதம் 7-ந் திகதி (23-11-71)

## கட்சி அரசியல்

கட்சி அரசியல் நம் நாட்டுக்கு ஒரு சாபத்தீடு என்று பொருள்படும்படி அமைச்சர் கே. பி. ரத்நாயக்கா பாராளுமன்றச் சபையில் வரவு-செலவுத் திட்டத்தின் மீது பேசுகையில் சரியாக எடுத்துச் சொன்னது மிகவும் சரி.

"தேர்தல் காலத்திலே எல்லா அரசியல் கட்சிகளும் மக்களுக்கு பல பல வாக்குறுதிகளை முன்பின் யோசியாமல் அளிக்கின்றன. கூட்டு முன்னணிக் கட்சியினரும் இதே குற்றத்தைச் செய்திருக்கிறார்கள் அவர் இல்லாவிட்டால் வாக்குகளை எவ்விதம் பெற முடியும்?" என்று கேட்டார். அவ்விதம் வாக்குறுதிகளை அளிக்காவிட்டால், வாக்குகள் பெற்று தேர்தலில் வெல்லமுடியாதென்பதை அமைச்சரே ஒப்புக்கொள்ளுகின்றார்! பின்னர் நடப்பதென்ன?

"ஆட்சிக்கு வந்தபின் முதல் ஆண்டில் அரசியல் மாறுதல்களைச் செய்வதில்தான் முக்கால் பங்கு நேரமும் செலவாகிவிடுகின்றது. இரண்டாவது அல்லது மூன்றாவது வருடத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. பின்னர் அடுத்த பொதுத்தேர்தலுக்கான ஏற்பாடுகள் செய்யவேண்டியிருப்பதால், தயாரித்த திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நேரம் இல்லை. இதுவே நாட்டின் சாபத்தீடு. ஒவ்வொருவரும் இதே வழியைப் பின்பற்றுவதால், நாடு அபிவிருத்தி அடைய முடியாமலிருப்பதாகவும், இதுவே தொடர்ந்து நீடிக்குமானால் நாட்டுக்கு எதிர்காலமே இல்லாது போய்விடும்" என்றும் எச்சரித்துள்ளார்.

அமைச்சர் கூறியுள்ள ஒவ்வொரு சொல்லும் உண்மையானது. ஜனநாயகமென்ற பேரில் எல்லா அரசியல் கட்சிகளும் இதே வழியைப் பின்பற்றுவதாயின் இக்கட்சிகள் மீதோ அரசியல் தலைவர்கள் மீதோ, இக்கை ஜனநாயக முறையின் மீதோ எப்படி நம்பிக்கை ஏற்பட முடியும்?

இப்பெரும் குறையை மூடிமறைக்காமல் துணிச்சலுடன் அமைச்சர் எடுத்துச் சொன்னபோதிலும் மாற்று வழிக்கான யோசனை எதுவும் கூறியதாகத் தெரியவில்லை. அரசியல் கட்சிகளிடையே போட்டிகள் அதிகரிப்பதால் தேர்தல் காலத்திலும், அதன் பிறகும் பொதுமக்களும் [illegible] சிறுபான்மைச் சமூகத்தவரும் அமைதியாக வாழவும் முடியாமல், வன்முறைகளுக்குப் பலியாகிச் சங்கடப்படுவது வழக்கமாகிவிட்டது. ஓர் அரசியல் கட்சி தேர்தலில் அதிக வாக்குகள் பெற்று ஆட்சிக்கு வந்துவிட்டால் மற்றக் கட்சிகளை ஆதரித்தவர்களுக்கு [illegible] சங்கடம்தான். அடுத்த தேர்தலில் ஆதரிக்கக்கூடியவர்களுக்கே ஆட்சியாளரின் சலுகைகள் கிடைக்கும். நாட்டின் நலனைவிட கட்சியின் நலனையே ஒவ்வொரு அரசியல்வாதியும் கருதும்படியாக இந்த முறை செய்துவிடுகின்றது.

இதே முறையை தொடர்ந்து கடைப்பிடிக்கவேண்டும் அழவேண்டியது தானா? இதற்கு ஏதும் மாற்று வழி உண்டா? இதைப் பற்றி தேசாபிமானமுள்ள தலைவர்கள் கூடிப் பேசவேண்டிய சமயம் வந்துவிட்டது. காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயகா இப்பெருங் குறையை உணர்ந்து கமிட்டி நிர்வாகமுறையை ஆதரித்தார். கட்சி முறையை ஒழித்துவிட வேண்டுமென்பதை நன்கு உணர்ந்திருந்தார். இப்பொழுது புதிய அரசியல் அமைப்பைப்பற்றி பேச்சுகள் நடக்கின்றன. கட்சி அரசியலால் இதுவரை நாட்டின் ஒற்றுமையும், அமைதியும் கெட்டு நாடு முன்னேறமுடியாமல் சங்கடப்படுவதை உணர்ந்தவர்கள், இந்த முறையைக் கைவிட்டு, காலஞ்சென்ற தலைவர் கூறிய யோசனைக்கு மதிப்புக் கொடுத்து அதை ஆதரிக்க முன்வருவார்களா? அப்படிச் செய்யாமல், இப்போதுள்ள கட்சி அரசியலே நீடிக்குமாயின் பொதுமக்களிடையே அதிருப்தி அதிகரித்து, நாடும் குட்டிச்சுவராகி விடலாம். அவ்விதம் ஏற்பட தேசாபிமானிகள் யாரும் இடம் கொடுக்க முடியாது.

## சாரண சேவையாளருக்கு நன்றி விருது

மாவிட்டபுரம், திங்கள்

"வருங்காலப் பிரஜைகளாகப்போகும் இன்றைய மாணவர்களுக்கு சிறந்தான பயிற்சியளிக்கின்றது சாரணிய இயக்கம். இவ்வியக்கம் வடக்கில் வளர அயராது உழைக்கும் சேவையாளன் தெ. து. ஜெயரத்தினம்."

இவ்வாறு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா தெல்லிப்பளை மகாஜனா அதிபராகவிருந்து சாரணர் சேவைக்கு அருஞ் சேவை ஆற்றியமைக்காகத் திரு. தெ. து. ஜெயரத்தினத்திற்கு நன்றி விருது வழங்கிப் பேசுகையில் கூறினார்.

மகாஜனா அதிபர் திரு. மா. மகாதேவன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடந்த இவ்விழாவில் அரசாங்க அதிபர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"இக்கல்லூரியில் சாரணர் இயக்கத்தை ஆரம்பித்து மாணவர்களை இவ்வியக்கத்தில் சேர்த்த பெருமை திரு. ஜெயரத்தினத்தையே சாரும். இவர் சாரணியத்துக்குச் சிறப்பாக ஆற்றிய சேவை கல்லூரி வரலாற்றில் இடம்பெறும்" என்றார்.

தெ. து. ஜெயரத்தினம் பதிலுரை வழங்குகையில் மகாஜனக் கல்லூரிச் சாரணிய வரலாற்றில் திரு. சி. எஸ். சுப்பிரமணியம் சாரண ஆசிரியராக இங்கு நியமிக்கப்பட்டமை மிகவும் முக்கியமானதொன்றாகும். அவரது அயராத சேவையால் சாரண இயக்கம் வளரக் கூடியதாக இருந்ததென்று அவரைப் பாராட்டினார்.

திரு. செ. கதிரேசர்பிள்ளை, என். வரதராசப்பெருமாள் உட்படப் பலர் உரையாற்றினர்.

# ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி

பத்து நாட்களுக்கு முன்பாக இந்திய வானொலியில் ஒரு செய்தியைக் கேட்டேன். தருமபுரம் ஆதீனத்தைச் சேர்ந்த சுவாமிகள் காசியிலே மகாசமாதி அடைந்துவிட்டதாகவும், சடலம் சென்னைக்குக் கொண்டுவரப்பட்டதாகவும் அரைகுறையாகக் கேட்டது. மறைந்தது மகாசந்நிதானம்தான் என்பதை நினைக்கவும் முடியவில்லை.

தமிழகத்திலிருந்து பத்திரிகை வந்தால் தெரிந்து கொள்ளலாமென்று ஆவலுடன் காத்திருந்தேன். சென்ற வெள்ளிக்கிழமை தான் 11, 12, 13-ம் திகதி 'இந்து'ப் பத்திரிகைகள் கிடைத்தன. அரை மணி தூரத்திலுள்ள திருச்சியிலிருந்து இப்பத்திரிகை கிடைக்க எட்டு நாட்கள் தாமதமானதேனோ? இன்னும் தணிக்கை செய்யவேண்டியது அவசியமாயின், இரண்டொரு மணி நேரத்தில் அதைச்செய்துவிட முடியாதா? எம். பி. க்களோ, அல்லது வேறு யாரோ இதைப்பற்றிப் பிரதமரிடமோ அமைச்சரிடமோ பேசி இந்த அடாத தவத்தைக் குறைக்க முன்வரமாட்டார்களா?

0 0 0

12-ந் திகதி வெள்ளிக்கிழமை 'இந்து'ப்பத்திரிகையில் தேடினேன். என் கண்ணுக்கு அச்செய்தி படவில்லை. 9-ம் பக்கத்தில் அடியிலே ஒரு சின்னத் தலைப்புடன் 'தர்மபுரம் மடத்தலைவர் மாண்டார்' (தர்மபுரம் மட்ஹெட் டெட்') என்று வெளியிடப்பட்ட செய்தியைக் கண்டதும் திடுக்கிட்டேன்.

சைவசித்தாந்தத்தைப் பரப்பும் ஒரு பெரிய ஆதீனத்தின் பிரபல குரு மகா சந்நிதானம் மகாசமாதி அடைந்த செய்தியை இப்படியா அவமதிக்கும்படி பிரசுரிப்பது? இலங்கையிலே ஒரு பௌத்த பிக்கு மறைந்தால் அச்செய்தியை ஆங்கிலப்பத்திரிகைகளும் எவ்வளவு பெரிதாக முதற் பக்கத்தில் வெளியிட்டு மரியாதை செய்கின்றன! தமிழகத்தில் ஒரு குரு மகா சந்நிதானம் மறைந்த செய்தியை இப்படியா எங்கோ ஒரு மூலையில் தமிழகப் பத்திரிகை வெளியிடு-

### ஐயாறன் எழுதுவது

-வது? என்று மனம் மிக வேதனை அளித்தது. என்ன செய்வது?

செய்தியைப் படித்தேன். கந்தசஷ்டி விரதம் இருந்துவிட்டு, ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் காசிக்குப் புறப்பட்டுச் சென்றாராம். அவரது ஜன்ம நட்சத்திரம் (பிறந்த நாள்) நவம்பர் 14-ந் திகதியன்று. காசிக்குச் சென்று கங்கையில் மூழ்கி, விசுவநாதப்பெருமானை தரிசிக்கவேண்டுமென்றே அங்கு சென்றாராம். ஆனால் 10-ந் திகதி இரவு கோவிலுக்குச்சென்று சுவாமி தரிசனம் செய்துவிட்டு தமது மடத்துக்கு வந்து நாற்காலியில் அமர்ந்ததும், திடீரென ஆவிபிரிந்து மகாசமாதி அடைந்துவிட்டதாகத் தெரிகிறது.

எப்பேர்ப்பட்ட பிரிவு! 'அனாயாசேன மரணம்' வேண்டுமென்றுதான் பெரியோர்கள் இறைவனைக் கேட்பார்களாம் அதாவது பாயில் கிடந்து நோயால் அவதிப்படாமல் 'டக்' என்று கஷ்டமின்றி ஆவி பிரிந்துவிட வேண்டுமென்று தான் கேட்பார்கள். அவ்வித உத்தமமான மரணம் அதுவும் காசியில் கிடைத்தது அவர் செய்த புண்ணியமாகும்.

வயது அவருக்கு 59 தான். பட்டத்துக்கு வந்தது 1945-ம் வருடம். 26 வருட ஆட்சியிலே அவர் செய்துள்ள பணிகள் அளப்பரியன. ஈழத்திலிருந்து யார் சென்றாலும் சரி தனியான அன்புகாட்டி இங்குள்ள நிலைமையையெல்லாம் அக்கறையுடன் விசாரிப்பார்கள். அவர் கைலாசத்துக்கு யாத்திரை சென்று தரிசித்து அதன் விவரமெல்லாம் பெருநூலாக வெளியிட்டுள்ளார்கள். காசியில் நடைபெற்ற [illegible] கும்பாபிஷேகத்துக்கு கயிலைக் குருமணி [illegible] வருவாரென்று எதிர்பார்க்கப்பட்டது முடியவில்லை.

ஈழத்திலே பாடல்பெற்ற திருக்கேதீச்சரம் திருகோணமலை இவற்றுக்கும் கதிர்காமத்துக்கும் வந்து தரிசிக்கவேண்டுமென்று கேட்டதற்கு "திருவருள் கூட்டினால் வரலாம்" என்றார்கள். அவர் இங்கு வரமுடியாமற்போனது ஈழத்துச்சைவமக்களின் துரதிஷ்டமே. அவரைப் போன்ற ஒரு குருமகா சந்நிதானத்தை இனி எப்போது பார்க்கமுடியும்?

தமக்குப் பதில் சென்னை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தம்பிரான் சுவாமிகளை இங்கு அனுப்பிவைத்தார்கள். அவரே இன்று அவருக்குப் பிறகு புதிதாக பட்டத்துக்கு வந்துள்ளது மகிழ்ச்சியளிக்கும் விஷயமாகும். அவர் இங்கு வந்தபோது அவரையே "இளவரசு" என்று குறிப்பிட்டிருந்தேன். திருவருளும் அப்படியே கூட்டியுள்ளது. புதிய சந்நிதானம் கூடிய சீக்கிரத்தில் ஈழத்துக்கு வந்து இங்கு சைவத்துக்குப் புத்துயிர் அளிக்கவேண்டுமென்பது ஈழத்து சைவமக்களின் பேரவாவாகும். புதிய குரு மகாசந்நிதானத்தின் அருளாட்சி நீடூழிவாழ்க!

## மகாவலி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

-தால் வேலைகள் ஸ்தம்பித்தன.

பெரும் பாறையொன்றை நடுவில் ஐந்தரை மைல் தூரம் குடையப்படும் இந்தச் சுரங்கம் உக்வெலைக்கு அருகில் பாறையிலிருந்து விடுபட்டு மண் பகுதிக்கு வருகின்றது. இங்கு எதிர்புறமாக ஜலதாரையொன்று தோன்றி பெரும் கற்கள், மண்கட்டிகள் ஆகியவற்றுடன் கீழ்நோக்கி ஓடத் தொடங்கியுள்ளது.

நிலமட்டத்திலிருந்து சுமார் 1,000 அடி ஆழத்தில் இந்தச் சுரங்கம் வெட்டப்படுகிறது. வத்தேகமைக்கு அருகிலுள்ள தனுவில என்ற இடத்தில் சுரங்கத்தில் இந்த தண்ணீர் பிரச்னை தோன்றியிருப்பதாகவும் பூமிக்கடியில் நீர்பாய்வதால் ஈரமுற்ற மண்ணும் கற்பாறைகளும் சுரங்கத்துக்குள் சரிந்து விழுகின்றனவாம்.

இந்தப் பிரச்னையை எவ்வாறு சமாளிப்பது என்பது பற்றியும், திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்றுவது பற்றியும் அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

மகாவலி திட்டம்பற்றி இந்திய நீர்ப்பாசன, மின்விசை அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் சில தினங்களுக்குமுன் நேரில் பார்த்து ஆராய்ந்துவிட்டுத் திரும்பியிருப்பது தெரிந்ததே.

ச. ச. நிலையங்களுக்கு

## நன்கொடைப்பணம் பற்றி ஒழுங்கு செய்வார்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு க. யோசேப்புடன் தொடர்புகொண்டு வடமாகாணத்திலுள்ள சன சமூக நிலையங்களுக்கு நன்கொடைப்பணம் வழங்குவதற்குவேண்டிய ஒழுங்குகளைச் செய்வதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு கே. நல்லைநாதன் யாழ். மாவட்ட சன சமூக நிலையங்களின் சார்பில் தம்மைச் சந்தித்துப்பேசிய யாழ். மாவட்ட சன சமூக நிலையங்களின் சமாஜப் பிரதிநிதிகளுக்குத் தெரிவித்ததாகத் தெரிகிறது.

இக்குழுவினர் வடமாகாணத்திலுள்ள சில சன சமூக நிலையங்களுக்கு 69ம் ஆண்டு முதல் நன்கொடைப்பணம் கொடுபடவில்லை என்றும் இந்நிலையங்கட்கு வழங்கும் நன்கொடையை கூட்டித் தரும்படியும் கேட்டுக்கொண்டனர். சன சமூக நிலையங்களின் சமாச ஆண்டு விழாவிற்கு பிரதம விருந்தினராக உள்ளூராட்சி அமைச்சரை வரவழைப்பதெனவும் தெரிவிக்கப்பட்டது. இக்குழுவில் சமாசத் தலைவர் திரு வே. சுப்பையா, செயலாளர் இராசையா, உபசெயலாளர் தி. யோகசாமி, பொருளாளர் ஆ. மார்டின் மற்றும் பலரும் இருந்தனர்.

மாவிட்டபுரம், திங்கள்

காங்கேசன் துறையில் பௌத்தவிகாரை அமைப்பதற்கு அரை ஏக்கர் காணி தந்தமைக்கு அரசுக்கும், அரசாங்க அதிபருக்கும் நன்றி தெரிவிப்பதென காங்கேசன்துறை ஐக்கிய பௌத்த சங்கம் தீர்மானித்துள்ளது.

## பகவான் தினத்தில் பஜனை

யாழ்ப்பாணம், செவ்.

பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா சமித்தி சங்கத்தாரால் இன்று திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபாவின் திரு அவதார 46வது வருடாந்த தினம் கொண்டாடப்படுகிறது. மாலை 5 மணிக்கு மங்களவாத்திய இசையுடன் ஆரம்பமாகும் பஜனை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 58-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு நவம்பர் மாதம் 23-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.